DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.II SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 93 / 2018 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 6 |
| Name | திருமதி. இசக்கியம்மாள் |
| Husband Name | பெரியசாமி கோனார் |
| Village | சோணகன்விளை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 71 |

**(எதிரி ஆஜரில்லை: எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 04-07-2025.(நேரம்:12.25 PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது சோனகன்விளையில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் வீட்டில் குடித்தனம் செய்து வருகிறேன்.
3. சாட்சிகள் சுந்தரம் மற்றும் ரமேஷ்சை தெரியும். ரமேஷ் என் மகன் ஆவார்.
4. இரு எதிரிகளை எனக்கு தெரியாது.
5.சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக மாலை 03.30 மணி அளவில் ஏரலில் உள்ள நட்டாத்தி அம்மங்ன கோவில் சாமி கும்பிட்டுவிட்டு திரும்ப வந்து பஸ்ஸில் ஏறும் போது எனது கழுத்தில் இருந்த எட்டுபவுன் எடையுள்ள முறுக்கு செயினை காணவில்லை .
6. பின்பு எனது செயின் காணாமல் போனது குறித்துஏரல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். **அந்த புகார்மனு அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
7. என்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கை ரேகை என்னுடையதுதான்.
8. திருடியவர்கள் யார் என்று எனக்கு எதுவும் தெரியாது.

9. நீதிமன்றத்தில் அந்த எட்டு பவுன் நகைக்கு மதிப்பான பணத்தை நான் மனு செய்து பெற்றுக் கொண்டேன்.
**10.** போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

(அ.சா 6 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 6 ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 13.07.2016 ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு ஏரல் காவல்நிலையத்தில் நான் புகார் மனு அளித்தன் பேரில் 04.12.2016ம் தேதிஅமாலை சுமார் 17.00 மணி அளவில் ஏரல் காவல்நிலையத்தில் இருந்து போன் மூலமாக தொலைந்து போன தங்க செயினை கண்டுபிடித்து விட்டதாகவும் திருடிய நபரை கைது செய்து காவல்நிலையத்தில் வைத்து இருப்பதாகவும், அங்கு வந்து எதிரிகளைஅடையாளம் காட்ட போலிசார் அழைத்ததன் பேரில் நான் என் மகனுடன் காவல் நிலையம் வந்து திருடிய நபர்களான டேவிட் மற்றும் சஞ்சை என தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல மேற்கண்ட விவரததைமேற்கண்டவாறு போலிசார் விசாரணயில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் விசாரணை** : இல்லை

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.II SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 93 / 2018 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 7 |
| Name | திருமதி. சுந்தரம் |
| Husband Name | சங்கரன் |
| Village | சோனகன்விளை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 65 |

**<u>(1, 2 எதிரிகள் ஆஜரில்லை: 1,2 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 04-07-2025.(நேரம்:12.35 PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது சோனகன்விளையில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் வீட்டில் குடித்தனம் செய்து வருகிறேன்.
3. சாட்சிகள் இசக்கியம்மாள் எனதுபக்கத்து வீட்டுக்காரர்.
4. இரு எதிரிகளையும் எனக்கு தெரியாது.

5.சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் மாலை 04.30 மணி அளவில் ஏரலில் உள்ள நட்டாத்தி அம்மன் கோவில் நானும் இசக்கியம்மாளும் சாமி கும்பிட்டுவிட்டு திரும்ப வந்து பஸ்ஸில் ஏறும் போது யாரோ இசக்கியம்மாள் கழுத்தில் இருந்த எட்டுபவுன் எடையுள்ள முறுக்கு செயினை அத்துவிட்டு சென்றுவிட்டார்கள். .

6. பின்பு இசக்கியம்மாள் செயின் காணாமல் போனதற்கு ஏரல் காவல் நிலையத்தில் புகார்இசக்கியம்மாள் புகார் கொடுத்தார்.

7. திருடியவர்கள் யார் என்று எனக்கு எதுவும் தெரியாது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.II SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 93 / 2018 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 8 |
| Name | திரு. ரமேஷ் |
| Father Name | பெரியசாமி கோனார் |
| Village | சோdகன்விளை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 51 |

**(1.2எதிரிகள் ஆஜரில்லை: 1,2 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 04-07-2025.(நேரம்:12.25 PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது திருசசெந்தூரில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் தமிழ்நாடு தீயணைப்பு துறையில் முன்னனி தீயணைப்பு வீரராக பணிசெய்து வருகிறேன்.
3. சாட்சிகள் இசக்கியம்மாள் மற்றும் சுந்தரம் தெரியும்.இசக்கியம்மாள் என் தாயார் ஆவார்.
4. இரு எதிரிகளையும் எனக்கு தெரியாது.

5கடந்த 2016 ம் ஆண்டு மாலை 03.30 மணி அளவில் எனது தயார் இசக்கியம்மாளும், சாட்சிசுந்தரமும், ஏரலில் உள்ள நட்டாத்தி அம்மன் கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு திரும்புவதற்காக ஏரல் காந்திசிலை பக்கம் பஸ் ஏறும் போது எனது தாயாரின் கழுத்தில் இருந்த எட்டுபவுன் எடையுள்ள முறுக்கு செயினை காணவில்லை என்ற விவரத்தை கேள்விப்பட்டேன்.

6. பின்பு எனது தயாரின் செயின் காணாமல் போனது குறித்து ஏரல் காவல் நிலையத்தில் புகார்மனு கொடுதப்பதற்காக நானும் என் தாயாரும் காவல்நிலையம்சென்றோம்.

7. என்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனுவில் உள்ள ரமேஷ் என்ற அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **அந்த அறிவேன் சாட்சி கையெழுத்து அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை .

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.